**இரண்டாவது கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம், தஞ்சாவூர்**

**முன்னிலை : திருமதி.அ.மலர்விழி, M.L.,**
**இரண்டாவது கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி.**
**தஞ்சாவூர்.**

**2023ஆம்ஆண்டு டிசம்பர் திங்கள் 8ஆம் நாள் வெள்ளிக்கிழமை**
**(திருவள்ளுவராண்டு 2054–கார்த்திகைத் திங்கள்22 ஆம் நாள்)**

**அசல் வழக்கு எண்.28/2022**

**CNR No: TNTJ010003022022OS/100/2022**

நீலாவதி ......**வாதி**

**/எதிர்/**

(1) S. பரிமளா
(2) இளவர். சுஜீதா வயது 15
(3) இளவர். பவீன் வயது 6
(2, 3 பிரதிவாதிகளுக்காக அவர்களது
காப்பாளரும் தாயாருமான 1ஆம் பிரதிவாதி) **......பிரதிவாதிகள்**

இவ்வழக்கு, தஞ்சாவூர் முதன்மை மாவட்ட நீதிமன்றத்தில் **16.2.2022** அன்று கோப்பில் எடுக்கப்பட்டு, **8.3.2022** அன்று இந்நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்டுள்ளது. இவ்வழக்கு **1.12.2023** அன்று என் முன்பாக இறுதி விசாரணைக்கு வந்ததில் வாதி தரப்பில் வழக்கறிஞர் **திரு. K. ராமநாதன்** அவர்கள் முன்னிலையாகியும், 1 முதல் 3 பிரதிவாதிகள் தரப்பில் வழக்கறிஞர் **திரு.K. பார்த்திபன்** அவர்கள் முன்னிலையாகியும், பிரதிவாதிகள் தரப்பில் எதிர்வழக்குரை தாக்கல் செய்யப்பட்டபோதிலும், பிரதிவாதிகள் தரப்பு சாட்சியத்திற்காக போடப்பட்ட நிலையில் பிரதிவாதிகள் நீதிமன்றத்தில் அழைத்து ஆஜராகாததால் எதிரவரில்லா நிலையாக்கப்பட்டும், வாதி தரப்பு வாதங்களைக் கேட்டும், வழக்கில் சம்பந்தப்பட்ட முக்கிய ஆவணங்களைப் பரிசீலித்தும், இவ்வழக்கினை இதுநாள்வரை எனது கவனமான பரிசீலனையில் வைத்திருந்தும், இன்று இந்நீதிமன்றம் பிறப்பிக்கும்

## தீர்ப்புரை

(1) தாவா சொத்துக்கள் 1 முதல் 3 அட்டவணை சொத்துக்களில் வாதிக்குரிய 1/4 பாக உரிமை உள்ளது என்று முதல்நிலை தீர்ப்பாணை பிறப்பிக்கக் கோரியும், முதல்நிலை தீர்ப்பாணையை அனுசரித்து நீதிமன்ற ஆணையர் நியமனம் செய்து தாவா சொத்தில் வாதிக்குரிய 1/4 பாகத்தை பிரித்துக்கொடுக்க கோரி இறுதிநிலை தீர்ப்பாணை பிறப்பிக்கக் கோரியும், தாவா சொத்தில் வாதிக்கு ஒதுக்கப்பட்டுள்ள பங்கை வாதி வசம் ஒப்படைக்க உத்தரவிடக்கோரியும், வழக்கின் செலவுத்தொகை கோரியும் இவ்வழக்கு வாதியால் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**வழக்குரையின் சுருக்கம்:**

(2) இவ்வழக்கின் வாதியின் மூத்தமகன் சேகர் என்பவர் 26.1.2001 அன்று 1ஆம் பிரதிவாதியை திருமணம் செய்து கொண்டார். அதனால் 2, 3 பிரதிவாதிகள் பிறந்தனர். வாதியின் மகன் சேகர் பஹ்ரைன் நாட்டில் டிரைவராக வேலை பார்த்து ஈட்டிய பணத்தைக்கொண்டு வழக்கு 1வது இனச்சொத்தை 27.6.2003 அன்று பதிவான கிரய சாசனம் மூலம் கிரயம் பெற்றார். 1ஆம் பிரதிவாதி ஆடம்பரமாகவும், ஊதாரித்தனமாகவும் செலவு செய்தும், 1ஆம் பிரதிவாதியின் கணவருடன் அடிக்கடி சண்டையிட்டு வந்ததால், அவர்களுக்கிடையே தஞ்சாவூர், கூடுதல் சார்பு நீதிமன்றத்தில் H.M.O.P. No.176/2018, மகளிர் நீதிமன்றத்தில் D.V.C. No.22/2021 மற்றும் M.C. No.9/2020 வழக்குகள் இருந்தன. தாவா சொத்தின் ஒருபகுதியில் 1ஆம் பிரதிவாதி குடியிருந்து வருகிறார். 1ஆம் பிரதிவாதி போலீசில் வாதி மீதும் அவரது குடும்பத்தினர் மீதும் புகார் கொடுத்து வந்ததால் சேகர் மனஉளைச்சலுக்கு உள்ளாகியிருந்தார். கொரனா தொற்று காரணமாக 25.5.2021 அன்று இறந்துவிட்டார். அவர்

இறப்பிற்கு முன்பு  தனது சொத்தை யார் அடையவேண்டும் என்று ஆடியோ மற்றும் வீடியோவாக வாட்ஸ்–அப் மூலம் அனுப்பியுள்ளார். அதன்படி சேகரின் சொத்துகளில் 1ஆம் பிரதிவாதி எந்த உரிமையும் கோர இயலாது. தாவா சொத்தில் தாவா சொத்துகளில் இரண்டு பகுதிகளாக உள்ள மாடி வீடுகளில் சிவக்குமார், ராதாகிருஷ்ணன், பாத்திமா, பாலாஜி ஆகியோருக்கு வாடகைக்கு விட்டு 1ஆம் பிரதிவாதி வாடகையை பெற்று வருகிறார். இந்து வாரிசுரிமை சட்டப்படி வாதி இறந்துபோன சேகரின் முதல்நிலை வாரிசுதாரர் ஆவார். வாதி 1ஆம் பிரதிவாதியை அணுகி 26.7.2021 அன்று தாவா சொத்தில் வாதிக்குரிய பாகத்தையோ அல்லது அதற்கு ஈடான தொகையையோ கேட்டார். 1ஆம் பிரதிவாதி அதற்கு சம்மதிக்கவில்லை. அதனால், வாதி தனக்குரிய பாகத்தை கோரி இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளார்.  வாதிக்கு வழக்கு சொத்தில் 1/4 பாகம் உரிமையுள்ளது என்று முதல்நிலை தீர்ப்பாணை பிறப்பிக்கக் கோரியும், முதல்நிலை தீர்ப்பாணையை அனுசரித்து நீதிமன்ற ஆணையர் நியமனம் செய்து தாவா சொத்தில் வாதிக்குரிய 1/4 பாகத்தை பிரித்துக்கொடுக்க கோரி இறுதிநிலை தீர்ப்பாணை பிறப்பிக்கக் கோரியும்,  செலவுத்தொகையும் இதர பரிகாரமும் வழங்கக்கோரி வாதி வழக்குரை தாக்கல் செய்துள்ளார்.

(3) இவ்வழக்கில் எழுவினாக்கள் வனையப்பட்டு  வாதி தரப்பில் வாதி வா.சா.1 ஆக  விசாரிக்கப்பட்டு, வா.சா.ஆ.1 முதல் வா.சா.ஆ.11 வரையிலான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளன. இவ்வழக்கின் வா.சா.1ஐ குறுக்கு விசாரணை செய்ய  பிரதிவாதிகள் முன்வராததாலும்  1 முதல் 3 பிரதிவாதிகள் நீதிமன்றத்தில் அழைத்து ஆஜராகாததால் எதிரவரில்லா நிலையாக்கப்பட்டுள்ளனர்.

(4) **தீர்விற்குரிய பிரச்சினை யாதெனில்,**

வாதி கோரிய படி வழக்கு அனுமதிக்கத்தக்கதா? என்பதேயாகும்.

**தீர்வு**

**(5)** வாதி தரப்பு வாதம் கேட்கப்பட்டது. ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டன. வாதி தனது வழக்குரையிலும் வா.சா.1ஆக அளித்துள்ள சாட்சியத்திலும், இவ்வழக்கின் வாதியின் மூத்தமகன் சேகர் என்பவர் 26.1.2001 அன்று 1ஆம் பிரதிவாதியை திருமணம் செய்து கொண்டு அவர்களுக்கு 2, 3 பிரதிவாதிகள் பிறந்தனர் என்றும், வாதியின் மகன் சேகர் பஹ்ரைன் நாட்டில் டிரைவராக வேலை பார்த்து ஈட்டிய பணத்தைக்கொண்டு வழக்கு 1வது இனச்சொத்தை 27.6.2003 அன்று பதிவான கிரய சாசனம் மூலம் கிரயம் பெற்றார் என்றும், 1ஆம் பிரதிவாதி ஆடம்பரமாகவும், ஊதாரித்தனமாகவும் செலவு செய்தும், 1ஆம் பிரதிவாதியின் கணவருடன் அடிக்கடி சண்டையிட்டு வந்ததால், அவர்களுக்கிடையே தஞ்சாவூர், கூடுதல் சார்பு நீதிமன்றத்தில் H.M.O.P. No.176/2018, மகளிர் நீதிமன்றத்தில் D.V.C. No.22/2021 மற்றும் M.C. No.9/2020 வழக்குகள் இருந்தன என்றும், தாவா சொத்தின் ஒருபகுதியில் 1ஆம் பிரதிவாதி குடியிருந்து வருகிறார் என்றும், 1ஆம் பிரதிவாதி போலீசில் வாதி மீதும் அவரது குடும்பத்தினர் மீதும் புகார் கொடுத்து வந்ததால் சேகர் மனஉளைச்சலுக்கு உள்ளாகியிருந்தார் என்றும், கொரனா தொற்று காரணமாக 25.5.2021 அன்று சேகர் இறந்துவிட்டார் என்றும், அவர் இறப்பிற்கு முன்பு தனது சொத்தை யார் அடையவேண்டும் என்று ஆடியோ மற்றும் வீடியோவாக வாட்ஸ்–அப் மூலம் அனுப்பியுள்ளார் என்றும், அதன்படி சேகரின் சொத்துகளில் 1ஆம் பிரதிவாதி எந்த உரிமையும் கோர இயலாது என்றும், தாவா சொத்துகளில் இரண்டு பகுதிகளாக உள்ள மாடி வீடுகளில் சிவக்குமார்,

ராதாகிருஷ்ணன், பாத்திமா, பாலாஜி ஆகியோருக்கு வாடகைக்கு விட்டு 1ஆம் பிரதிவாதி வாடகையை பெற்று வருகிறார் என்றும், இந்து வாரிசுரிமை சட்டப்படி வாதி இறந்துபோன சேகரின் முதல்நிலை வாரிசுதாரர் என்றும், வாதி 1ஆம் பிரதிவாதியை அணுகி 26.7.2021 அன்று தாவா சொத்தில் வாதிக்குரிய பாகத்தையோ அல்லது அதற்கு ஈடான தொகையையோ கேட்டதாகவும், 1ஆம் பிரதிவாதி அதற்கு சம்மதிக்கவில்லை என்றும், அதனால், வாதி தனக்குரிய பாகத்தை கோரி இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளார் எனவும் சொல்லப்பட்டுள்ளது.

(6) வாதி தரப்பு வழக்கை நிரூபிக்கும்பொருட்டு வாதி தரப்பில் 1 முதல் 11 வரையிலான ஆவணங்கள் தாக்கல் செய்யப்பட்டுள்ளன. 27.6.2003ஆம் தேதியிட்ட கிரய பத்திரத்தின் பதிவிறக்க நகல் வா.சா.ஆ.1 ஆகவும், 1.6.2003 முதல் 12.11.2009 வரையான தாவா சொத்தின் வில்லங்கச்சான்று நகல் வா.சா.ஆ.2 ஆகவும், தஞ்சாவூர், கூடுதல் சார்பு நீதிமன்றம் H.M.O.P. No.176/2018 மனுவின் நகல் வா.சா.ஆ.3 ஆகவும், D.V.C No.4/2018–ன் மனுநகல் வா.சா.ஆ.4 ஆகவும், D.V.C No.4/2018 வழக்கின் எதிருரையின் நகல் வா.சா.ஆ.5 ஆகவும், M.C No.4/2018 மனுநகல் வா.சா.ஆ.6 ஆகவும், M.C No.4/2018 எதிருரையின் நகல் வா.சா.ஆ.7 ஆகவும், 5.2.2019 தேதியிட்ட சேகர் என்பவர் பெயரில் உள்ள வரிரசீதுகள் அசல் வா.சா.ஆ.8 முதல் 10 ஆகவும், தாவா சொத்தின் கட்டிட புகைப்படங்கள் (3 எண்ணிக்கை) வா.சா.ஆ.11 ஆகவும் குறியிடப்பட்டுள்ளன. அவை வாதியின் வழக்கை நிரூபிப்பதாகவும் அமைந்துள்ளது. மாறாக, பிரதிவாதிகள் தரப்பில் வாதியின் வழக்கை மறுத்தோ, வாதியின் சாட்சியத்தை பொய்ப்பித்தோ நீதிமன்றத்தில் முன்னிலையாகி வா.சா.1ஐ குறுக்கு விசாரணை செய்து

வழக்கை நடத்தத முன்வரவில்லை. வாதி , 1முதல் 3பிரதிவாதிகள் இறந்துபோன சேகரின் முதல்நிலை வாரிசு என்பதால் சொத்துக்களில்வாதி , 1 முதல் 3பிரதிவாதிகளுக்கு தலா 1/4 உள்ளது . எனவே வாதி வழக்குரையில் கோரியவாறு வழக்கு அனுமதிக்கத்தக்கது என்று இந்நீதிமன்றம் இப்பிரச்சினைக்கு தீர்வு காண்கிறது.

(7) முடிவாக, எதிரிவரில்லா நிலையில், வாதியின் வழக்கு அனுமதிக்கப்பட்டு, வாதிக்கு வழக்கு சொத்தில் 1/4 பாகம் கிடைக்ககூடியது என முதல்நிலை தீர்ப்பாணை வழங்கி தீர்ப்பளிக்கப்படுகிறது. செலவுத்தொகை இல்லை.

என்னால் சுருக்கெழுத்தருக்கு சொல்லப்பட்டு, அவரால் கணினியில் விரிவாக்கம் செய்யப்பட்டு, என்னால் பிழைதிருத்தம் செய்யப்பட்டு, **2023ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 8ஆம் நாள்** இந்நீதிமன்றத்தில் தீர்ப்பு அவையறிய பகரப்பட்டது.

Digitally signed by
A MALARVIZHI

**இரண்டாவது கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி, தஞ்சாவூர்.**

**வாதி தரப்பு சாட்சி**

| | |
|---|---|
| வா.சா.1 | நீலாவதி |

**வாதி தரப்பு சான்றாவணங்கள்**

| | | |
|---|---|---|
| வா.சா.ஆ.1 | 27.6.2003 | சுப்பிரமணியன் என்பவர் சேகருக்காக சேகர் மனைவி பரிமளாதேவி என்பவருக்கு எழுதிக் கொடுத்த கிரய பத்திரத்தின் பதிவிறக்க நகல் |
| வா.சா.ஆ.2 | 25.1.2021 | 1.6.2003 முதல் 12.11.2009 வரையான தாவா சொத்தின் வில்லங்கச்சான்று நகல் |
| வா.சா.ஆ.3 | 14.5.2018 | தஞ்சாவூர், கூடுதல் சார்பு நீதிமன்றம் H.M.O.P. No.176/2018 மனுவின் நகல் |

| | | |
|---|---|---|
| வா.சா.ஆ.4 | 20.8.2018 | D.V.C No.4/2018–ன் மனு நகல் |
| வா.சா.ஆ.5 | -- | D.V.C No.4/2018 வழக்கின் எதிருரையின் நகல் |
| வா.சா.ஆ.6 | -- | M.C No.4/2018 மனு நகல் |
| வா.சா.ஆ.7 | -- | M.C No.4/2018 எதிருரையின் நகல் |
| வா.சா.ஆ.8 | 5.2.2019 | சேகர் என்பவர் பெயரில் உள்ள வரிரசீதுகள் அசல் |
| | 5.2.2019 | சேகர் என்பவர் பெயரில் உள்ள வரிரசீதுகள் அசல் |
| | 5.2.2019 | சேகர் என்பவர் பெயரில் உள்ள வரிரசீதுகள் அசல் |
| வா.சா.ஆ.11 | -- | தாவா சொத்தின் கட்டிட புகைப்படங்கள் (3 எண்ணிக்கை) |

Digitally signed by
A MALARVIZHI

**இரண்டாவது கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி, தஞ்சாவூர்.**

**தீர்ப்புரை**
**அசல் வழக்கு எண்.28/2022**
**நாள்: 8.12.2023**